Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்க கால இலக்கியங்களில் இசைக்கருவிகள்

**அருட் சகோதரி யேசுமரி அருளப்பன்**
**இசைத்துறை (வாய்ப்பாட்டு)**
**கலைக்காவிரி**
**திருச்சிராப்பள்ளி**

37

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கி.மு 500 இல் இருந்து கி.பி 200 வரை உள்ளகாலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்களாகும். 473 புலவர்களால் எழுதப்பட்டது. 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. சங்க இலக்கியம் மணற்கேணி போன்றது. தோண்டுபவரின் தன்மைக்கும், திறமைக்கும் ஏற்ப கருத்தாக்கங்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். தொடக்கக் கால தமிழர்களின் பண்பாட்டையும், நாகரீகத்தையும் வெளிப்படுத்தும் சான்றுகளாக இவை உள்ளன. சங்க இலக்கியத்தின் உயிர்நாடியாக விளங்குவது காதலும் வீரமுமாகும். வீரயுக இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படும் சங்க இலக்கியங்களைப் பாட்டும் தொகையும் எனப் பாகுபடுத்துவர். இவையே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எனப்படுகின்றன. இவ்விலக்கிய நூல்களில் இசைக்கருவிகள் எவ்வாறு இருந்தது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இசையும், இசைக்கருவிகளும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. "நாணயத்தின் இரு பக்கங்கள்" போன்றவை. ஒன்றினால் ஒன்று சிறப்பு பெறுகிறது. சங்க கால இலக்கியங்களில் இசை எவ்வாறு முக்கியத்துவம் பெற்றதோ, அதற்கு சரி நிகராக இசைக்கருவிகளும் சிறப்புப் பெற்றன. இது பற்றி ஆராய்வதே கட்டுரையின் சிறப்பாக இருக்கிறது.

**கடவுச் சொற்கள் :** இலக்கியங்கள், இசைக்கருவிகள், சங்ககாலம், **யாழ்**

**முன்னுரை**

மெய்க்கீர்த்தி முன்னோடியாய் திகழும் சங்க பாடல்களில் பழந்தமிழ் நாட்டின் வாழ்க்கை முறை, பண்பாடு பற்றிய பல அறிய தகவல்கள் பொதிந்து கிடக்கின்றன. வரலாற்றுச் சம்பவங்கள், அரசர்களினதும் வள்ளல்களினதும் இயல்புகள் பொதுமக்களின் காதல் வாழ்க்கை, அக்காலக் கலைகள், நகரங்கள் பற்றிய தகவல்கள், இயற்கை பற்றிய வர்ணனைகள் போன்றவை தொடர்பான தகவல்களை இவற்றிலிருந்து பெற முடிகிறது. மேற்காணப்படும் அம்சங்களைக் கொண்ட நிலையில் திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, பொருணர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, என்பவை பத்துப்பாட்டு நூல்கள் என்று அழைக்கப்படுகிறது. எட்டுத்தொகை நூல்களின் தொகுப்பாக அகநூல்கள், நற்றிணை,

குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய நூல்களும் புறநூல்களாக புறநானூறு, பதிற்றுப்பத்து, அகமும் புறமும் உடைய நூல்களாக பரிபாடலும் கொள்ளப்படுகின்றது. இவ் இலக்கிய நூல்களில் இசைக்கருவிகளின் சிறப்பு பற்றி பார்க்கும் பொழுது தமிழர்கள், பறவை, மிருகம் அருவி போன்ற இயற்கை பொருட்களோடு இசை ஒப்பிட்டு அனுபவித்ததை சங்க பாடல்கள் பல கூறுகின்றன. “தெய்வம் உணாவே மாமரம் புட்பறை செய்தி யாழின் பகுதியோடு தொகைய அவ்வகை பிறவும் கருவென மொழிய” அகத் (18 – 20) என்று தொல்காப்பியர் மொழிவதிலிருந்து அவர்கள் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் இசைக்கருவிகள் ஏற்றம் பெற்று இருந்தன என்பதை நம்மால் அறிய முடிகிறது.

**சங்ககால இசையும் இசைக்கருவிகளும்**

சங்க காலத்தில் ஆண்கள் பெண்கள் மட்டுமல்லாது இசையும் கூத்தும் வல்ல பாணர், பாடினியர், விறலியர் (ஆடல் மகளிர்) போன்றோர் பண்ணும் தாளமும் கூடிய இசைப் பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள் தாளவிசைக் கருவிகள் ஆகியவற்றின் துணையோடு சிறப்பாகப்பாடியுள்ளனர். தாளம் பாட்டை ஒழுங்குபடுத்துவதோடு கேட்பதற்கு இனிமை தருகிறது. அதற்குத் தாளவிசைக்கருவிகள் துணை நிற்கின்றன. இவ்வாறாக இவர்கள் கையாண்ட இசைக்கருவிகளை சங்க கால இலக்கியங்களிலிருந்து வகைப்படுத்தி ப்பார்க்கலாம். (1) தோற்கருவி (2) துளைக்கருவி (3) நரம்பு கருவி (4) தாளக் கருவி. குறிப்பிடப்பட்ட இசைக்கருவிகளை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து நிலங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ப பயன்படுத்தினர். மலைபடுகடாம் என்ற இலக்கியத்தில் தமிழிசை கருவிகளின் வகைகள் விளக்கப்பட்டுள்ளன. “விண் அதிர் இமில் இசை கடுப்ப பன்னமைத்து திண்வார் விசித்த முழவோடு ஆகுளி” என்ற பாடல் இதனை விவரிக்கின்றது. இந்நிலையில் குறிஞ்சி நிலத்திற்குரிய தோற்கருவியாக பறையும் மருத நிலத்த்திற்குரிய தோற்கருவியாக முழவும் முல்லை நிலத்திற்குரிய தோற்கருவியாக ஏறுகோட்டுப்பறையும் புல்லாங்குழலும் நெய்தல் நிலத்திற்குரிய கருவியாக விளரி யாழும் நாவாயப் பம்பை முதலியவையும் தோற்கருவியாக தடியும் இசைக்கப்படுகின்றது. இன்னும் பட்டின பாலை என்னும் சங்க நூல் காவிரிப்பூம்பட்டின பண்டகசாலையில் யாழ்கள் இருந்தன என்று கூறுகிறது.

**சங்க இசை கருவிகளும் அவை சுட்டும் நூல்களும்**

**யாழ்**

இது ஒரு நரம்புக் கருவியாகும் சங்க கால இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபானாற்றுப்படை, மலைபடுகடாம் போன்றவற்றில் காணப்படும் முக்கியமான இசை கருவியாகும். மேற்குறிப்பிடப்பட்ட சங்க இலக்கியத்தில் வில்யாழ் சீறியாழ் பேரியாழ் என்னும் மூவகை யாழ்களைக் காணமுடிகிறது.

**வில்யாழ்**

வில்யாழ் பற்றி பாணன் குறிஞ்சிப்பண் பாடியதாக குறிப்புண்டு. "புழற் கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின் வில்யாழ் இசைக்கும் விரல் ஏறி குறிஞ்சி" (பெரு.185-189) சங்க காலத்தில் யாழும் இசைவாணர்களும் என்று பார்க்கும் போது இசைக்கருவிகளோடு பாடுதல் சங்க கால மரபாக இருந்திருக்கிறது. பாணர்கள் யாவருமே இசைக்கத் தெரிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனை பின்வரும் இலக்கியம் கூறுகிறது. "கை கவர் நரம்பின் பணுவற் பாணன்" (நற் 200.8) யாழும் இறைவழிபாடும் என்ற கருப்பொருளில் தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தும் போது யாழ் இசைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இன்னும் பிற இசை கருவிகளோடும் இசைக்கப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. "வண்டொடு தும்பியும் வண் தொடை யாழ் ஆர்ப்ப (பரி.1:50) திவவு மெய் நிறுத்துச் ( மதுரை 604) வண்டினங்களின் இரைச்சலோடு யாழினை இணைத்துப் பேசும் குறிப்புகள் காணப்பட்டன. அதாவது வண்டின் ஒலி பாலைப்பண் மற்றும் விளரிப் பண்ணை ஒத்துள்ளதாக கூறப்படுகிறது. (அகம் 317:12 -13) இது அளவில் சிறியதாய் இருக்கும்.

**சீறியாழ்**

பாணர் விறலியை தனது ஒரு கையில் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் யாழையும் பிடித்துக் கொண்டும் செல்வர் காடுகளில் பயம் தெரியாமல் இருக்க சீறியாழை வாசிப்பர் என்பதை "வழக்கை விறலி என் பின்னள் ஆக பொன் வார்த்தன்ன புரி அடங்கு நரம்பின்" (புறம்135:4-7) என்ற இலக்கிய பாடலூடாய் அறிய முடிகிறது.

**பேரியாழ்**

இது அளவில் பெரிதாய் இருக்கும். "இறைவன் ஆகலின் சொல்லுப் புகுறுகி மூவேழ் துறையும் முறையளிக் கழிப்பி" என்ற பாடலில் "மூவேழ் துறையும் முறையளிக் கழிப்பி" என்ற வரியிலிருந்து வலிவு மெலிவு சமம் எனும் மூன்று காலத்திலும் ஒவ்வொன்றிலும் ஏழு தாளம் சேர்ந்து இருப்பதொரு நரம்பாலான பேரியாழ்" எனும் இசைக் கருவியினைக் கொண்டு பாடப்பட்டதாகக் குறிப்புண்டு. மேற்கண்ட சிறப்புகளை யாழ் சங்க கால இலக்கியங்களில் கொண்டுள்ளது.

**துளைக் கருவிகள்**

சங்க கால மனிதர்களிடையே வழங்கி வந்துள்ள பயன்பாட்டிற்குரிய சில இசைக்கருவிகள் சங்க இலக்கியங்களாகிய பரிபாடல் கலித்தொகை, புறநானூறு, குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, ஐங்குறுநூறு, மலைபடுகடாம் ஆகிய நூல்களில் பதிவு பெற்றுள்ளன. அவற்றில் துளைக்க்கருவி எனும் பிரிவில் சங்கு, குழல், கொம்பு, தூம்பு எனும் நான்கு துறைகருவிகளை பற்றிய சான்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**சங்கு**

சங்க இலக்கிய பயன்பாட்டிலிருந்த இசைக்கருவிகளில் சங்கு முதன்மையான இடம் பெற்றது. இருப்பினை பல தூரங்களுக்கு தெரியப்படுத்த இக்கருவி உதவியது. "வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்" என பெருப்பாணாற்று படையிலும் (3:5) இது தூக்கணாங் குருவியின் கூடு போன்று உள்ளதால் அமைப்பின் அடிப்படையில் "தூக்கணம் குரீ இத் தூக்குக் கூடு ஏய்ப்ப ஒரு சிறை கொளீ இய திரிவாய் கொழிய திருவாய் வலம்புரி" என புறநானூற்றிலும் (225: 11-12) சங்கின் ஒலி பாணர்கள் பாடும் மெல்லிய இசை போன்று இனிமை உடையது என்று நற்றிணையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. "விருந்தின் பாணர் விளரி இசை கருப்ப" ( நற் 172:7-8) இவ்வாறாக சங்ககால இலக்கியங்களில் சங்கு சிறப்பிடம் பெறுகின்றது.

**குழல்**

ஊது கருவிகளில் சங்கிற்கு அடுத்ததாக தோன்றியது குழலாகும். சங்க இலக்கியத்தில் ஆம்பல்குழல், கொன்றைக் குழல் எனும் இருவகையான குழல்கள் பதிவாகியுள்ளன. இக்கருவியினைஆயர்குல மக்கள் தந்ததாக் கூறப்படுகின்றது.

**ஆம்பல் குழல்**

முல்லை நிலத்தின் பல இடங்களிலும் ஆம்பல் என்னும் பண்ணை இனிமையான குரலில் பலமுறை இசைப்பர். பசுக்களைக் கட்டுவதற்கு ஆயர்கள் குழலில் பண்ணை இசைத்துள்ளனர். "ஆம்பல் அம் தீங்குழல் தெளவின் பயிற்ற" (குறி 2:22) "ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளை இப்" (அகம் 214.12) "ஆம்பற் குழலால் பயிர் எம் படப்பை" (கலி 108.62)" ஆம்பல் அம் குழளின் ஏங்கி" (நற் – 113 . 11) " தீங்குழல் ஆம்பலின் இனிய இமிரும்" (ஜங் 215.4) என சங்க இலக்கியங்கள் பல குழலின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

**கொன்றைக் குழல்**

கொன்றைக் காயைக் காணும் ஆயர்கள் அதனைக் குழலாகக் கருதியுள்ளனர். பொது மன்றங்களில் கொன்றைக் குழலை இசைத்துள்ளனர். இன்னும் குழல் திருமாலுடன் தொடர்புடையதாக் கருதப்பட்டது. இச்செய்திகளை தரும் பாடல்கள் வருமாறு "துய்த்த வாய துகள் நிலம் பறக்க கொன்றை அம்சினைக் குழற் பழம் கொளுதி" (அகம் 15: 14 - 15 ) "கொன்றை குழற் பழம்" (ஜங்.458:1) நெளிக்கோள் கொண்ட பெரு விறல் ஞெகிழிச் பெரும் (178:180) கொம்பு பழங்குடி மக்கள், நாட்டுப்புற மக்கள் ஆகியோரிடத்தில் பண்பாட்டில் இருந்த கருவியாகும். கொம்பு சங்க இலக்கியத்தில் வயிர் என்றும் அழைக்கப்பட்டது. "திண்காழ் வயிர் எழுந்து இசைப்ப" (திரு. 119-120) கொம்பு கருமையான மயிற் பீலியைக் கொண்டு அழகுப் படுத்தப்பட்டுள்ள செய்தியை மலைபடுகடாம் பின்வருமாறு கூறுகிறது. "மின்னிரும் பீலி அணித் தழை கோட்டோடு மலை" என கொம்பின் ஒலி" ஒப்புமை பற்றி பேசும் சங்க இலக்கியம் அரண்மனை முற்றத்தில் பல்வேறு விலங்குகளும், பறவைகளும் இருக்கின்ற காட்சியினை தொகுத்து சொல்லுகின்ற போது "கலி மயில் அகவும் வயிர் மருள் இன் இசை நெடு" (பொரு9:9)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

"ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்" (குறி 2:19) என்று கொம்பின் ஒலி அகவும் ஒலியைப் போலுள்ளது என்றும் வீரர்களை உற்சாகப்படுத்தும் போர் கருவி என்ற நிலையில் "வயங்கும் கதிர் வயிரொடு ஆர்ப்ப" பதிற்று (67 : 6) என்றும் கொம்பானது சங்க இலக்கியத்தில் இடம்பெற்று கோடு வயர் என அழைக்கப்பட்டு சிறப்புப்பெறுகிறது.

**தூம்பு**

சங்க காலத்தில் பயன்பாட்டில் இருந்த துளைக் கருவிகளில் ஒன்று 'கண் விடு தூம்பு' அல்லது ' தூம்பு' எனும் கருவி. நீண்ட துளையுடைய குழாய் போன்றது என்பதால் தூம்பு என்று அழைக்கப்பட்டது. மேகத்தைத் துளைத்துக்கொண்டு மழைப் பொழிவதை தூம்பு என்று குறிப்பிடுகின்றது சங்க இலக்கியம். இன்னும் கடவுளை வணங்கும் பாடலுக்கும் இது பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் பாண் மரபினர் தும்பை சுமந்து சென்ற குறிப்புகளும் சங்க இலக்கியங்களில் உண்டு. "கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு" (அகம் 82: 5) "ஒருதரம் பண் ஆர் தும்பி பரந்து இசை ஊத" (பரி 17 12) "கலை வளர் தூம்பின் கண் இடம் இமிர கண்ணறுத் தியற்றிய தும்போடு சுருக்கி (மலை.533) தூம்பு யானையின் துதிக்கையைப் போன்று துளையுடையதாகவும் நீண்டதாகவும் இருந்துள்ளது. ஆடல் பாடல் ஆகிய நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய தூங்கினை கூத்தர்கள் கூத்து நடத்தும் போது யானையின் பிளிறல் ஒலி போன்ற தும்பையும் பிற கருவிகளோடு இசைத்து ஆடி உள்ளதாக இலக்கிய பாடல் குறிப்புண்டு. "சொறி நடைப் பிடியொடு களிறு புணர்ந் தென்கை குறுநெடும் தூம்பொடு முழவுப் புணர்ந் திசைப்ப" (அகம் 301:16-17) இவ்வாறாக சங்க காலத்தின் இலக்கியங்களில் சங்கு, குழல்,கொம்பு, தூம்பு என்னும் நான்கு துளை கருவிகளும் சிறப்புறுகின்றன.

**தோற்கருவிகள்**

வீரத்தை உணர்த்த, வெற்றியை அறிவிக்க, கிளிகளை ஓட்ட, விளையாடல் நிகழ்த்த என்றுப் பலவற்றிற்கு தோற்கருவிகள் பயன்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தரும்முரசினைப் போர்க்காலங்களில் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக தோல்கருவிகள் பற்றி கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, மலைபடுகடாம் ஆகிய நூல்கள் கூறுகின்றன.

**முரசு**

இது சங்க கால போர் நிகழ்வுகள் அனைத்திலும் காணப்பட்டுள்ளது. " முனிவில் முற்றத்து இனிது முரசு இயம்ப" (புறம் 29: 8) "முரசு முழங்கு நெடுநகர் அரசு துயில்யாது" (பதிற்று 12:7) போருக்கு அழைத்தல், போருக்கு புறப்படுதல் போர்ப் பாசறை பற்றி பலக் கருத்துக்கள் புறநானூற்றிலும் உண்டு. "இரங்குமுரசின் இளம்சால் பானை" (புறம் 207 :2-3) "தெண் கிணை மன்னர்க் கலிற்றின் இயலி" புறம் (79-3) பலி பெறு பாசறை சிலைப்ப (புறம் 362:3)

**சல்லரி**

சல்லரி என்பது தோலால் மூடிய ஒரு முகப்பறை. சங்க கால இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட இதன் ஒரு வாய் திறந்திருக்கும். குழியினை உள்ளே காட்டிய உடலினை உடையது. உள்ளங்கையாலும் நுனி விரல்களாலும் தாக்கப்பட்டு முழங்கப்படுவது. "அரிக்கூடு இன் இயம் கறங்க நேர் நிறுத்து எண்ணியல் கறங்க நீர் நிறுத்து" (மதுரை 6:12) எனும் அடி இயம்புகிறது.

**சிறுப்பறை**

சிறுப்பறை என்பது குறிஞ்சி நிலத்துத் தோற்பறையாகும். இது ஒரு முகப்பறையாகும். "நுண் சீர் ஆகுளி இரட்ட" என்று மதுரை காஞ்சியில் குறிப்பிடப்படுகின்றது. இன்னும் "மெல்லிய நீர்மையினுடைய சிறுப்பறை ஒலிப்ப" என நச்சினார்க்கினியர் உரை வகுத்திருப்பதால் நுண்ணிய ஒலி உடையது எனப்படுகின்றது. இதற்கு மறு பெயர் "ஆகுளி" என்றும் கூறப்படுகிறது.

**தட்டை**

நீண்டதோர் மூங்கிலை எடுத்து நடுவில் நெட்டுக்குப் பிளந்து கொண்டு கைபிடிக்கும் பக்கம் பிளக்காமல் வைத்துக் கொள்வர் ஒரு புறத்தைப் பிடித்துக் கொண்டு மறுபக்கத்தை தட்டி ஓசை எழுப்புதலால் தட்டை எனப்படுகிறது. "அமை அறுத்து இயற்றிய வெவ் வாய்த் தட்டை" (அகம்388:2 எனும் அடியால் அறியலாம். இதனை திணைப்புனம் காக்கும் மகளிர் கிளிகளை விரட்டப்பயன்படுத்தி உள்ளனர். இவ்வாறாக சங்க கால இலக்கியங்களில் தோற்கருவிகள் சிறப்புறுகின்றன.

**தாளக் கருவிகள் ( கஞ்சக் கருவிகள் )**

தாள கருவிகள் விலங்கு, பறவை, உயிரினங்கள், மரம், பழம், காய் ஆகியவற்றோடு மனிதனின் உடல் உறுப்புகளோடும் ஒப்பிடப்பட்டுள்ளன. இசைக்கருவிகளில் தாளக் கருவிகள் பற்றி நற்றுணை கூறுகிறது அதில்

**முழவு**

முழவு என்பது குறுக்கம்பு கொண்டும் கை விரல்களை கொண்டும் அடிக்கப்படும் தாளவிசைக் கருவியாகும். "முளவிசைப் புணரி எழுதரும்" (நற் 67:11) என மண்ணால் செய்யப்பட்ட (குடம்) முழவு சிறப்பிக்கப்படுகிறது.

**தண்ணுமை**

இது மிருதங்கத்திற்கு பாட்டியென வர்ணிக்கப்படும் "இருபுறம் உழவு ஆகும் மதனுடை முழவுத் தோளோச்சித தண்ணெண" என (புற 50:12) கூறுகின்றது. தடாரி பொருநராற்றுப்படையின் நோக்கில் தடாரி அடிக்கோல் இல்லாது விரல்களால் அடித்து இசைக்கப்படும் கருவி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகுளி என்பதும் சங்க இலக்கியங்களில் காணப்படும் தாளவிசைக் கருவியாகும். இது முழவுக்கு இணையாகவும் துணையாகவும் அமையும் கருவியாக தோன்றுகிறது. இதனை சிலர் தோள்கருவி என்றும் கூறுகின்றனர்.

**பாட்டில்**

இது ஒரு கஞ்சக் கருவியாகும். தாளமிடுவதற்காக பயன்படுத்துவது. பாட்டில் என்பதுவாத்தியத்தையும் கைத் தாளத்தையும் இசைக்கச் செய்தலைக் குறிக்கும். தண்ணுமை பண்டைத் தமிழ்நாட்டில் மிகச்சிறந்த தாளக் கருவியாக இருந்தது என்றும் போர்க்களத்தில் முழங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (நற் 3:6-7)

**துடி**

துடி மீன் துண்டத்துடன் ஒப்புமையாக கூறப்படும் தாள வாத்தியமாகும். "துடிக்கண் காழுங் குறைநொடுத்து உண்டு ஆடி" (நெடு22:3) மேற்கண்ட சிறப்புகளை சங்க காலத்து இலக்கியங்களில் தாளக்கருவிகள் பெற்றுள்ளன.

**முடிவுரை**

இசை எவ்வாறு சங்ககால மக்களின் வாழ்வில் இடம் பிடித்ததோ அதற்கு இணையாகவே இசைக்கருவிகளும் இடம் பெற்றிருந்தன. அதாவது இசையை மெருகூட்டக்கூடியவையாக இசைக்கருவிகள் அக்காலத்தில் மக்களால் அமைக்கப்பட்டிருந்தன. என்பதனை சங்க கால இலக்கியங்கள் தெளிவாக கூறியிருக்கின்றன. அந்த இசைக்கருவிகள் யாவை? அவை எந்த அளவிற்கு இலக்கியங்களில் இடம் பிடித்துள்ளது? என்பதை ஆராய்ந்தமை சங்ககாலத்தில் இசைக்கருவிகளின் பங்கினை அறிய உதவியதோடு இசைக்கருவிகள் சங்ககால இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஆனால் அக்கருவிகள் இன்று மறைந்துவிட்டமை கவலைக்குரியதாகவும் உள்ளது.

**அடிக்குறிப்புகள்**

"யாழ் ஒத்தன்ன இன்குரல் இன வண்டு" (நற்.176:8)

"பூ ஊது வண்டினம் யாழ் கொண்ட கொளை கேண்மின்" (பரி 11: 125)

"கோவலர் தீம்குழல் இணைய அரோ" (கலி.130:14-15)

"கொன்றைஅம் குழலர் பின்றை தூங்க இம்மாவல அகம்"; (54:10-11)

"வெண்கூதாளத்து அம்தூம்பு புதுமலர்" (குறு.282:6)

"மடிவாய்த் தண்ணுமை நடுவன் சிலைப்ப" (பெரும்.144)

"மாக்கன் முரசம் ஒவு இல கறங்க" (மதுரை.733)

"போர்பறை தண்ணுமை ஆர்ப்பு எழுந்து நுவல" ( பதிற்று.84:15)

"நுணாநீர் ஆகுளி இரட்ட பலவுடன்" (மதுரை.606)

"விசி பிணிக்கொண்ட மண் கனை முழவின்" ( புறம் 15:23)

**துணை நூல்கள்**

சங்க இலக்கியத்தில் இசை- இரா.கலைவாணி (சு.தமிழ்வேலு)

சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் (முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன்)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சங்கப் பெண்பாற் புலவர்களும் சமூகமும் (முனைவர் சு.சதாசிவம்)
யாழ் நூல் (ஆ.அ.வரகுணபாண்டியன்)
இசைத்தமிழ் வரலாறு (து.ஆ. தனபாண்டியன்)
தமிழிசைக் களஞ்சியம் (வி.பா.கா. சுந்தரம்)

**இணைய முகவரி**

https://www.pothunalam.com/sanga-ilakkiyam
https://ilakkiyam.com/sangailakkiyam
https://ta.wikipedia.org
https://tamilebooks.org/tamil-sangam-literature-list
http://www.muthukamalam.com
https://tamilandvedas.com